FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி – I**

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ **1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), 3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் புள்ளடியிடுக.**

01. இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை முதன்முதலில் அறிமுகம் செய்த பல்கலைக்கழகம்.
1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2) திருகோணமலை வளாகம்
3) கொழும்புப் பல்கலைக்கழகம்
4) தெஹிவளை கனிஷ்ட பல்கலைக்கழகம்
5) களனிப் பல்கலைக்கழகம்

02. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படை உள்ளடக்கமாக (Content) கருதப்படக்கூடியது.
1) ஊடகம்
2) தொடர்பாடுநர்
3) தகவல்
4) பெறுநர்
5) அனுபவக்களம்

03. வெகுசன ஊடகங்களின் செயற்பாடுகள் சிறுவர்களிடையே பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியமையால் பாடசாலை மட்டத்தில் ஊடகக் கற்கைப் பாடத்தை இணைத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்திய அமைப்பு.
1) தேசிய கல்வி நிறுவனம்
2) யுனெஸ்கோ
3) மனித உரிமைகள் பேரவை
4) அரச ஆணைக்குழு சபை
5) பத்திரிகை முறைப்பாட்டாணைக்குழு

04. தொடர்பாடலினை ஓர் துறைசார் பாடமாகக் கற்க வேண்டுமென்ற நிலைப்பாடு உருவாகிய காலப்பகுதி.
1) 21ம் நூற்றாண்டு
2) 18ம் நூற்றாண்டு
3) 20ம் நூற்றாண்டு
4) 15ம் நூற்றாண்டு
5) 17ம் நூற்றாண்டு

05. ஓரிடத்தில் உருவாக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட தகவல் அவ்வாறோ அல்லது அதற்குச் சமமானதாகவோ வேறொரு இடத்தில்
1) விளைவை ஏற்படுத்துவதற்காகக் கூறுதலே தொடர்பாடலாகும்.
2) மீண்டும் உருவாக்கப்படுவதே தொடர்பாடலாகும்.
3) ஒருமித்த மனநிலையை ஏற்படுத்துவதே தொடர்பாடலாகும்.
4) குறியீட்டின் மூலம் முன்வைப்பதே தொடர்பாடலாகும்.
5) உறவுகளைப் பேணுவதற்கு பயன்படும் கருவியே தொடர்பாடலாகும்.

06. வெகுசனத் தொடர்பாடலின் விசேடமான பணி அல்லது நோக்கத்துடன் பொருந்தாதது.
1) மகிழ்வூட்டல்
2) சமூகமயமாக்கல்
3) பொருட்கோடல்
4) மேற்பார்வை
5) இணைப்பாக்கம் செய்தல்

agaram.lk

07. ஊடக நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்புபடாது ஊடக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடாத நிறுவனம்.
1) தொழில்சார் அமைப்பு 2) நீதிமன்றம்
3) நுகர்வோர் மற்றும் தாக்கம் செலுத்தும் குழு 4) அரச ஆணைக்குழு சபை
5) பத்திரிகை முறைப்பாட்டாணைக்குழு

08. இருவழிப் போக்குடைய தொடர்பாடல் செயன்முறையோடு தொடர்புடைய தொடர்பாடல் மாதிரி
1) லாஸ்வெல் மாதிரி 2) ஷனன், வீவர் மாதிரி 3) ஒஸ்குட், ஷ்ராம் மாதிரி
4) அரிஸ்ரோட்டில் மாதிரி 5) ஹப் (HUB) மாதிரி

09. நாட்டார் பாடல்கள் தொடர்பில் பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.
1) குறுகிய கால கலை 2) ஆக்கியோரை அறிய முடியாது
3) எளிமையான மொழிநடை 4) வாய்வழியாகப் பேணப்படுபவை
5) மீளுருவாக்க தன்மையுடையது

10. தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளரான சந்துரு உறவினரோடு உரையாடுவதற்கும் நிகழ்ச்சிகளில் உரையாடுவதற்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. இங்கு நிகழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய தொடர்பாடல் வடிவம்.
1) பேச்சுத் தொடர்பாடல் 2) வாய்மொழித் தொடர்பாடல் 3) வெகுசனத் தொடர்பாடல்
4) அளிக்கைத் தொடர்பாடல் 5) முறைசார் தொடர்பாடல்

11. அச்சிடப்பட்ட, அச்சிடப்படாத மற்றும் எழுதப்பட்ட தாள்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட வெளியீடு.
1) பத்திரிகை 2) புத்தகம் 3) சுவரொட்டி
4) துண்டுப்பிரசுரம் 5) சஞ்சிகை

12. A – சிறுவர்களின் மனக்கவலையை தீர்ப்பதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது.
B – சிறுவர்களின் மனதில் உலகம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துவதில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது.
C – சிறுவர்களின் சமூகத் தொடர்பு நலிவடைவதில் தொலைக்காட்சி ஊடகம் செல்வாக்குச் செலுத்துகின்றது.
மேற்குறித்த கூற்றுக்களில் வில்பர் ஷ்ராமினால் முன்வைக்கப்பட்ட ஆய்வறிக்கையுடன் பொருந்தும் கூற்றைத் தெரிவு செய்க.
1) A, B கூற்ற 2) A, C கூற்று 3) C, B கூற்று
4) A கூற்று மட்டும் 5) A, B, C கூற்று

13. குறுஞ்செய்தி வடிவில் 140 சொற்களுக்கு உட்பட்டு தகவல்களை உலகம் முழுவதும் பகிரக்கூடிய பொருத்தமான சமூக ஊடகம்.
1) முகநூல் (Facebook) 2) பின்ட்ரஸ்ட் (Pinterest) 3) கீச்சகம் (Twitter)
4) லிங்க்டின் (Linkedin) 5) வைபர் (Viber)

14. வாய் மூலம் வெளிப்படும் சொற்கள் மற்றும் ஓசைகளின் துணையோடு பல்வேறு கருத்துக்களை உருவாக்கும் தொடர்பாடல்.
1) பேச்சுத் தொடர்பாடல் 2) வாய்மொழித் தொடர்பாடல் 3) அளிக்கைத் தொடர்பாடல்
4) எழுத்துத் தொடர்பாடல் 5) முறைசார் தொடர்பாடல்

agaram.lk

❖ **பின்வரும் கூற்றுக்களை கவனத்தில் கொள்வதன் மூலம் 15 தொடக்கம் 18 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

A – தொடர்பாடுநர் மற்றைய பிரிவினருக்கு பரிமாற்றும் விடயம்.

B – கருத்து, உணர்வினை இன்னுமொருவர் விளங்கும் தகவலாக மாற்றுதல்.

C – எந்த தகவலை எவ்வாறு தொடர்பாடல் செய்வது என தீர்மானிக்கும் பணியாளர்.

D – தகவலை விளங்கிக் கொள்ள குறியீடுகளை எமக்கேற்ற மொழிநடையில் மாற்றுதல்.

E – ஊடக நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்புபடாது ஊடக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டு கட்டுப்படுத்துதல்.

F – அனைத்து தொடர்பாடலிலும் ஏதேனுமொரு விளைவு எதிர்பார்க்கப்படும். அத்தகைய விளைவு வெவ்வேறாக அமையலாம்.

15. ஊடகத் தகவல்கள் தனிக்கைக்குட்படுத்தப்படும் வாயிற்காப்பாளரின் இயல்பை எடுத்துக்கூறும் எழுத்து.

1) A  2) C  3) D  4) F  5) B

16. தொடர்பாடல் செயன்முறை தொடர்ந்தியங்குவதற்கு முக்கிய அம்சமாகவுள்ள தகவலின் இயல்பினை எடுத்துக்கூறும் எழுத்து.

1) E  2) B  3) F  4) A  5) D

17. குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு செயன்முறைகளை எடுத்துக்கூறும் எழுத்துக்கள்.

1) AB  2) AD  3) CE  4) CF  5) BD

18. அரிஸ்ரோட்டில் மற்றும் லாஸ்வெல் மாதிரிகளில் முக்கியப்படுத்தப்பட்ட தொடர்பாடல் அடிப்படைக்கூறின் இயல்பை எடுத்துக்கூறும் எழுத்து.

1) B  2) A  3) F  4) E  5) D

19. ஷனன் மற்றும் வீவர் மாதிரியில் உள்ளடங்குகின்ற பிரதான காரணிகளுடன் பொருந்தாத கூறு.

1) பின்னூட்டம்  2) இடையூறு  3) சமிக்ஞை
4) செலுத்தி  5) பெறுகை

20. தொழில் சார் தொடர்பாடுநர்களை அடிப்படையாகக் கொண்டு பரந்த மக்களிடம் நிகழக்கூடிய தொடர்பாடல்.

1) பொதுசனத் தொடர்பாடல்  2) வெகுசனத் தொடர்பாடல்  3) முறைசார் தொடர்பாடல்
4) குழுத் தொடர்பாடல்  5) மெய்நிகர் தொடர்பாடல்

21. தொடர்பாடல் கற்கை, ஓர் துறைசார் பாடமாகத் தற்காலத்தில் வளர்ச்சி பெற ஆரம்ப காலத்தில் வெவ்வேறு துறைகளிலிருந்து கருத்துக்களை முன்வைத்த அறிஞர்கள்.

1) ஹரோல்ட் டீ.லாஸ்வெல், ஜோர்ஜ் கெப்னர், வொரன் வீவர்.
2) குளோட் ஷனன், வில்பர் ஸ்ராம், கேர்ட் லெவின்.
3) பேராசிரியர் சுனந்த மகேந்திர, பேராசிரியர். கா.சிவத்தம்பி, பேராசிரியர் விமல் திசாநாயக்க.
4) போல். எப். லஸார்ஸ்பொ∴ல்ட், குளோட் ஷனன், வோல்ட்டர் லிப்மன்.
5) சார்ள்ஸ் ஹோர்ட்டன் கூலி, வோல்ட்டர் லிப்மன், ஜோன் டுவி.

agaram.lk

22. மனிதர்களைப் பீடிக்கும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் கிரகதோஷங்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறிய பொருத்தமான ஊடக முறைகள்.
   1) நாட்டார் பாடல், கிராமிய நாடகங்கள்.
   2) நாட்டார் கதைகள், நாட்டார் கவிதைகள்.
   3) நாட்டார் நாடகங்கள், கிரியைகளும் சடங்குகளும்.
   4) நாட்டார் கவிதைகள், பழமொழிகள்.
   5) நாட்டார் பாடல்கள், விடுகதைகள்.

23. மானுடத் தொடர்பாடல் வரலாற்றில் பயன்படுத்தப்பட்ட முதல் இரு தொடர்பாடல் வடிவங்கள்.
   1) ஆளுள் மற்றும் ஆளிடைத் தொடர்பாடல்.
   2) வாய்மொழி மற்றும் செவிப்புலத் தொடர்பாடல்.
   3) முறைசார் மற்றும் முறைசாராத் தொடர்பாடல்.
   4) காட்சி மற்றும் வாய்மொழி சாராத் தொடர்பாடல்
   5) எழுத்து மற்றும் வாய்மொழித் தொடர்பாடல்.

24. உலகலாவிய ரீதியில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை அதிகம் பரப்பி வரும் தளம்.
   1) இணையத்தளம்  2) சமூகவலைத்தளம்  3) இலத்திரனியல் பத்திரிகை
   4) புதிய ஊடகம்  5) பிரஜைகள் ஊடகம்

25. தொடர்பாடல் வகைகளின் பண்புகள் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் பின்வருமாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.
   நிஷா - நிறுவன கட்டமைப்புடன் இயங்கும் சிக்கலான தொடர்பாடல்.
   கிஷா - பௌதீக அடிப்படையில் இடவசதி தேவையில்லை.
   உஷா - ஒரே தடவையில் விசாலமான சனக்கூட்டத்திற்கு தகவல்களை வழங்கும் ஆற்றல்.
   துஷா - ஒரே தடவையில் பலருடன் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
   மேற்குறித்தவற்றில் மெய்நிகர் தொடர்பாடலின் பண்புகளுடன் தொடர்புடைய கருத்துக்களை வெளியிட்டவர்கள்.
   1) உஷா, துஷா  2) நிஷா, உஷா  3) கிஷா, துஷா
   4) நிஷா, கிஷா, உஷா  5) கிஷா, உஷா, துஷா

agaram.lk

## பகுதி - II

- ❖ **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**
- ❖ **ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

01. "மனிதனது சமூக வாழ்வில் முக்கியமான மையப்புள்ளி தொடர்பாடலாகும்"

1) தொடர்பாடல் பாடம், தொடர்பாடல் கற்கை என தனித்துறையாக வளர்ச்சியடைவதற்கு முன்னர் உள்ளடங்கியிருந்த மூன்று துறைகளினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை பாடத்தை பின்பற்றுவதால் மனிதர்களிடம் விருத்தியாகும் ஆற்றல்கள் நான்கினைத் தருக. (4 புள்ளிகள்)

3) யுனெஸ்கோவின் குருன்வெல்ட் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் தொடர்பாடல் கற்கை நெறியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாகத் தருக. (6 புள்ளிகள்)

4) தொடர்பாடல் கற்கைநெறி வளர்ச்சியடைய பங்காற்றிய மேற்கத்தேய மற்றும் கீழைத்தேய அறிஞர்களுடைய பங்களிப்பினை சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

02. "தொடர்பாடல் என்பது காலத்தோடு சேர்ந்து மாற்றத்திற்கு உட்படக்கூடிய தன்மை கொண்டதாகும்"

1) தொடர்பாடல் பற்றிய குளோட் ஷனன் மற்றும் வொரன் வீவரின் வரைவிலக்கணத்தை தருக. (2 புள்ளிகள்)

2) தொடர்பாடல் பலவிதமானது என்ற பண்பினை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாகக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைக் கூறுகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டிற்கு பத்திரிகை ஊடகத்தினை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமான விளக்கம் தருக. (6 புள்ளிகள்)

4) தொடர்பாடலின் அடிப்படைப் பணிகள் நாங்கினை உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

agaram.lk

03. 1) பாரம்பரிய ஊடகம் என்பதை சுருக்கமாக வரையறை செய்க. (2 புள்ளிகள்)

2) பாரம்பரிய ஊடகமானது சூழல் நேயமிக்க எளிமையான தொடர்பாடல் முறையாகும். அதற்கமைய அதன் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிட்டு ஒன்றிற்கு விளக்கம் தருக. (4 புள்ளிகள்)

3) பரந்த பிரதேசத்தில் வாழும் பல்வகைப்பட்ட விசாலமான மக்கள் பிரிவினரைத் தொடர்பு கொள்ளும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்களின் தனித்துவமான பண்புகளினை சுருக்கமாக தருக. (6 புள்ளிகள்)

4) சமூக ஊடகங்களின் பாவனையால் இளைஞர்கள் மட்டத்தில் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களினைக் குறிப்பிட்டு அவற்றிலிருந்து அவர்கள் மீண்டெழக்கூடிய வழிமுறைகளை சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

04. 1) வாயிற்காப்பாளர் பணியினை சுருக்கமாக குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) மெய்நிகர் தொடர்பாடலுக்கான (Virtual Communication) உமேயாப் பல்கலைக்கழக (Umea university) வரைவிலக்கணத்தைத் தருக. (4 புள்ளிகள்)

3) வாய்மொழித் தொடர்பாடல் மற்றும் பேச்சுத் தொடர்பாடல் ஆகியவற்றுக்கான எளிய வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டு குறித்த தொடர்பாடல்களின் ஆற்றல் விருத்திக்கான காரணிகளை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

4) வெகுசனத் தொடர்பாடலின் செயற்பாடு பற்றி ஹய்பர்ட், அன்குரெய்ட் மற்றும் போன் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட ஹப் (HUB) மாதிரியின் செயல்முறையினை சுருக்கமாக அறிமுகப்படுத்தி அதனுடன் தொடர்புபடும் கூறுகள் நான்கினை விபரிக்குக. (8 புள்ளிகள்)

05. "சிக்கல் நிறைந்த தொடர்பாடல் செயன்முறையை எளிமையாக விபரிக்கும் வழிமுறையே மாதிரிகளாகும்."

1) தொடர்பாடல் பற்றிய நேர்வழி மாதிரிகள் (Linear models) மூன்றின் பெயரினைத் தருக. (2 புள்ளிகள்)

2) ஒஸ்குட் மற்றும் ஷ்ராம் மாதிரியில் குறிப்பிடப்பட்ட குறிமுறையாக்கம் (Encoding) குறிமுறையவிழ்ப்பு (Decoding) ஆகியவற்றின் பதங்களை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் மாதிரிக்கும் ஒஸ்குட் மற்றும் வில்பர் ஸ்ராம் மாதிரிக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளிகள்)

4) குளோட் ஷனன் மற்றும் வீவர் மாதிரியில் பிரதானமாகக் குறிப்பிடப்பட்ட இடையூறுகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அத்தகைய இடையூறுகள் வெகுசன ஊடகங்களில் இடம் பெறக்கூடிய சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக குறிப்பிடுக. (8 புள்ளிகள்)

06. 1) ஆளிடைத் தொடர்பாடல் நிகழும் விதங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) குழுத் தொடர்பாடலை வெற்றிகரமாக்குவதில் தொடர்பாடுநர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் நான்கினை சுருக்கமான விளக்கத்துடன் தருக. (4 புள்ளிகள்)

3) பொதுசனத் தொடர்பாடலுக்கும் (Public communication) வெகுசனத் தொடர்பாடலுக்கும் (Mass communication) இடையிலான வேறுபாட்டை மூன்று அம்சங்களின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

4) மனிதர்களின் அன்றாட வாழ்வில் அதிகம் இடம்பெறக்கூடிய ஆளிடைத் தொடர்பாடலின் பயன்கள் நான்கினை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

07. 1) அச்சு ஊடக வெளியீடுகள் நான்கின் பெயரினைத் தருக. (2 புள்ளிகள்)

2) தொலைக்காட்சி ஊடகம் வழியாக வன்முறைகள் எடுத்துக் காட்டப்படும் வழிகள் இரண்டை உதாரணங்களுடன் சுருக்கமாகத் தருக. (4 புள்ளிகள்)

3) வெகுசனத் தொடர்பாடலின் விசேடமான பணிகள் மூன்றின் பண்புகளினை சுருக்கமாக குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

4) பாரம்பரிய ஊடக முறைகள் நான்கினை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (8 புள்ளிகள்)

agaram.lk